மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, நியாயமாக மத்திய அரசாங்கம் இந்தப் பணியைச் செய்ய வேண்டும். இதிலே ஏற்கனவே அவர்கள் சொன்னார்கள், தனியாரே இதை நடத்த முடியாமல் நஷ்டத்திலே இயங்குகின்ற காரணத்தால் விட்டு விடுகிறார்கள் என்று நாம் வாங்கி நஷ்டத்திலே விடுவதைவிட செய்ய வேண்டிய கடமையை ஏற்றுக்கொண்டிருக்கின்ற மத்திய அரசாங்கமே அதைத் தொடர்ந்து செய்து தர வேண்டுமென்று கேட்கலாம்.

பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கு மைய அரசின் மானியம்

310—(*வினா எண் 8720) திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

டில்லி மாநகர போக்குவரத்துக் கழகத்திற்கு மைய அரசு மானியம் வழங்குவதைப்போல் பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கு மானியம் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னை மாநகரத்தினுடைய போக்குவரத்துக் கழகம் இலாபத்தில் இயங்குகிறதா? எத்தனை வண்டிகள் சென்னை நகரத்தில் ஓடிக் கொண்டிருக்கின்றன? இந்த வாகனங்களில் எல்லாம் சில நேரங்களில் சுவரொட்டிகளை ஒட்டி விடுகிறார்கள். அப்படி அனுமதியில்லாமல் ஒட்டுவதைத் தடுக்கின்ற வகையிலும், போக்குவரத்துக் கழகத்திற்கு இலாபம் வருகின்றவகையிலும் பின்புறத்தில் விளம்பரப் பகுதி என்று ஒதுக்கி, அதிலே விளம்பரப்படுத்துபவர்களுக்கு இவ்வளவு கட்டணம் என்று நிர்ணயித்தால் இன்னும் அதிகமான வருவாய் வரும். எனவே, இந்தவகையில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, இந்தக் கேள்வி மானியத்தைப் பற்றிய கேள்வி. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினரவர்கள் சில முக்கியமான பிரச்சினைகளை இங்கே சொல்லியிருக்கிறார்கள். பல நேரங்களிலே அந்த வாகனங்களின்

1987 ஏப்ரல் 6]

பின்னாலே போஸ்டர்களை ஒட்டுகின்ற காரணத்தினால் அந்த வண்டிகள் பாதிக்கப்படுகின்றன. இதனால் போக்குவரத்துக் கழகத்திற்கு அதிகமான செலவுகள் ஏற்படுகின்றன. நாம்கூட, பின்னால் விளம்பரத்திற்கு என்று ஒரு இடத்தை ஒதுக்கிக் கொடுக்க வேண்டுமென்று யோசித்தோம். ஆனால் முறையாக அது பயன்படுத்தப்பட வேண்டுமென்பதுதான் அரசினுடைய கோரிக்கையாக இருக்கிறது. எனவே, அதைப் பற்றி எதிர்காலத்திலே யோசிக்கப்படும். ஏறத்தாழ சென்னையிலே மட்டும் 2,300 வண்டிகள் வரை—சுமாராகச் சொல்லுகிறேன். சரியான கணக்கு இப்பொழுது இல்லை. 2,300 வண்டிகள் வரை—இயங்கிக்கொண்டு இருக்கின்றன. எனவே 2,300 வண்டிகளிலேயும் பின்னாலே விளம்பரப்படுத்துவதற்கான ஏற்பாடு செய்வதைப் பற்றித் தனியாக ஆய்வு செய்யப்படும்.

தமிழகத்திலுள்ள பேருந்து நிலையங்கள்.

311—(*வினா எண் 9529) திரு. வே. கு. சின்னசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள அனைத்துப் பேருந்து நிலையங்களையும் போக்குவரத்துத் துறையே ஏற்று செயல்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

கும்பகோணம்-சென்னை நெடுஞ்சாலையிலுள்ள வெள்ளாற்றுப் பாலத்தை அகலப்படுத்தல்.

312—(*வினா எண் 9931) டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம்-சென்னை நெடுஞ்சாலையில் சேத்தியாதோப்பிற்கு அருகில் உள்ள வெள்ளாற்றுப் பாலத்தை அகலப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு?